www.tamilarangam.net

விஷேட கல்வி அலுவலகம்,
செட்டிகுளம் ம.வி.
செட்டிக்குளம்.
28-03-2009

திரு. பீ.எம். புன்னியாமீன்
முகாமைத்துவப் பணிப்பாளர்
சிந்தனை வட்டம்
உடத்தலவின்னை

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாப்பத்திரங்கள் வழங்குதல்

வடமாகாணத்தில் தற்போது நடைபெற்று வருகின்ற உள்நாட்டுப் போர் அனர்த்தங்கள் காரணமாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா மாவட்டங்களிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியா நகரிலுள்ள நலன்புரி நிலையங்களில் மக்கள் தங்கியுள்ளனர். இங்குள்ள மக்களின் பிள்ளைகளுடைய நலன் கருதி அந்தந்த நலன்புரி நிலையங்களினுள்ளே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. இங்குள்ள தரம் 05 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்காக இம் மாதத்தில் விண்ணப்பங்களை அனுப்பி வருகின்றனர். புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி தங்கள் நிறுவனத்திலிருந்து மாதிரி வினாதாள்களை இலவசமாக வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். கடந்த காலங்களில் இப்பாடசாலைகள் சொந்த இடத்தில் இயங்கி கொண்டிருந்த போது தங்கள் நிறுவனத்திலிருந்து மேற்படி பரீட்சைக்காக வினாப்பத்திரங்களை பெற்று வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பாடசாலைகளிற்கான நிதி ஒதுக்கீடு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் இம்மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்த மக்களிற்காக ஒதுக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளபடியால் தொழில் வாய்பின்றி காணப்படுகின்றார்கள். இந்த நிலையில் மேற்படி மாணவர்களின் கல்விக்காக தங்கள் நிறுவனத்தினூடாக மாதிரி வினாத்தாள்களையும், ஏனைய பயிற்சி புத்தகங்களையும் இலவசமாக வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். எதிர் காலத்தில் மக்கள் மேலதிகமாக வரும் போது இவ் எண்ணிக்கை மாறுபடும். தங்களின் கல்விக்காக பணியினூடாக இம் மாணவர்கள் மேன்மையுற வேண்டும்

www.tamilarangam.net

| நலன்புரி நிலையங்கள் | மாணவர் தொகை |
|---|---|
| 1. கதிர்காமர் வித்தி | 160 |
| 2. சிவானந்தா வித்தி | 25 |
| 3. செட்டிகுளம் ம.வி | 65 |
| 4. பம்பைமடு விடுதி | 110 |
| 5. தொழில்நுட்பக்கல்லூரி | 86 |
| 6. கலைமகள் வித்தி | 82 |
| 7. முஸ்லீம் ம.வி | 53 |
| 8. காமினி வித்தி | 47 |
| 9. சைவபிரகாச வித்தி | 63 |
| 10. தமிழ் ம.ம.வி | 131 |
| 11. பூந்தோட்டம் ம.வி | 36 |
| 12. கல்வியற்கல்லூரி | 164 |
| 13. கோவில்குளம் இந்துக் கல்லூரி | 35 |
| | 1057 |

த.மேகநாதன்

திரு.த.மேகநாதன்.

இணைப்பாளர்,

விஷேட கல்வி அலுவலகம்,

வலயக்கல்விப்பணிப்பாளர்,

துணுக்காய்

**V. MEGANATHAN**
**Zonal Director of Education**
**Zonal Education Office**
**Thunukkai**
**Mankulam.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்